**தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 01 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டினது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்டெம்பர் 28 ஆந் திகதியன்று மாநகர ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களினாலான தாக்கத்தினைத் தவிர, தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின்போது அவதானிக்கபட்டன.

(அ) மாநகரசபைக்குரிய தொகையை நிச்சயிக்காது, கல்கிஸ்ஸ மஜிஸ்டிரேட் நீதிமன்றம் சகல வழக்குகள் மூலமும் அறவிட்டிருந்த தண்டப் பணத் தொகையாகிய ரூபா 38,058,207 மாநகர சபையின் வருவாயாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது, நிறுவன வளத்திட்ட மென் அணி முறைமை ஒன்றை அறிமுகஞ் செய்ய எதிர்பார்த்தபோதும், செலவு மேற்கொள்ளப்படாததும் பணி நிறைவேறாதுயிருந்தது. ஆகவே, கடன் கொடுத்தோர் பெறுமதி ரூபா 915,800 அதிகரித்தும் வருமான, செலவின கணக்கு மிகை ரூபா 10,060,000 குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலைகளது பெறுமதியாகிய ரூபா 707,324 நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலைகள் பதிவேட்டின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 971,632 ஆகவிருந்ததால் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 264,308 குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) கழிவுப் பொருட்களை அகற்றியமை தொடர்பாக தேசிய வனவிலங்குப் பூங்காவிலிருந்து 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 85,563 நிதிக்கூற்றுக்களில் காட்டப்படாமையால் நடைமுறைச் சொத்துக்கள் அதேயளவு (ஏனைய வருவாய் நிலுவை) குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(உ) கழிவுப் பொருட்களை அகற்றுவது தொடர்பாக 2016 ஆம் ஆண்டிற்கென கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபைக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த தொகை ரூபா 46,952,956 ஆகும். நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆண்டிற்கான செலவினம் ரூபா 47,307,277 ஆகியமையால் நிதிக்கூற்றுக்களில் செவினம் ரூபா 354,321 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன், கடன் கொடுத்தோரும் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த சொத்துக்களுக்கான வட்டி மீளளிப்பு ரூபா 874,373 ஆகும். எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் அதனை ரூபா 371,005 ஆகக் காட்டியமையால் ரூபா 503,368 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கூடுதலாக அறவிடப்பட்ட ஊழியர் கடன் கூட்டுத் தொகை ரூபா 304,197 ஆகும். அம்மீதியானது ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டப்படாமையால் நடைமுறைப் பொறுப்பு அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வண்டின்போது ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்த ஜயசிங்ஹ ஞாபகார்த்த நாட்டிய மன்றத்தின் தீயணைப்புத் தொகுதிக்கு ரூபா 20,000,000 கடன் கொடுத்தோராக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், இத்தொகை பயன்படுத்தப்படாததால் மூலதனச் செலவினமும் கடன்பட்டோர் தொகையும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஐ) நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,734,163 குறைத்தும் தேய்மானப் பெறுமதி ரூபா 389,108 குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஒ) வெளி நபர்களால் சபைக்கு வழங்கப்பட்ட 04 வாகனங்கள் மதிப்பிடப்பட்டு கணக்கிலிடப்படவில்லை.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட ரூபா 655,312,647 கூட்டுத் தொகையுடைய 14 கணக்கீட்டு விடயங்களுக்குரிய மீதிகள் அவற்றுடன் தொடர்புடைய உப பதிவேடுகள் மற்றும் அறிக்கைளில் காணப்படும் மீதிகளுடன் இணக்கம் செய்யப்படுகையில் நிதிக்கூற்றுக்களில் ரூபா 26,679,027 குறைவாகவும் ரூபா 9,306,579 அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி ஆணையாளருக்குச் சமர்பிக்கப்பட்ட வருவாய் நிலுவை அறிக்கையின் பிரகாரம் 05 வகையான வருவாயினது நானாவித வருவாய் மீதி நிலுவை ரூபா 292,360,119 ஆகவிருந்தபோதும், நிதிக்கூற்றுக்களில் அதனை ரூபா 348,732,242 ஆகக் காட்டியமையால் ரூபா 56,372,123 வேறுபாடு நிலவியது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

(அ) 2002 முதல் 2016 வரை சபைக்குக் கிடைத்த ரூபா 968,185 பெறுமதியான காசோலைகளுக்குக் கொடுப்பனவு மறுக்கப்பட்டிருந்தபோதும், அவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாதிருந்த வாகன, இடர், விழா மற்றும் விசேட கடன்களைக் கொண்ட ஊழியர் கடன் மீதி ரூபா 4,891,554 ஆகும். இக்கடன்கள் ஓராண்டிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தன.

(இ) நிதிப்பிரமாணங்கள் 570,571 என்பவற்றின் பிரகாரம் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்புகள் அரச வருவாயில் செலவு வைக்கப்பட வேண்டுமாயினும், 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறு செலவு வைக்கப்படாதிருந்த வைப்புகள் ரூபா 21,009,391 ஆகும்.

(ஈ) 2006, 2007 ஆம் ஆண்டுகளுக்கான சொத்துக் கடன் வட்டி மீதியாகிய ரூபா 121,456 உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து மீளளிப்புச் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) 2013,2014,2015 ஆம் ஆண்டுகளுக்கான அங்கத்தவர் படி நிலுவை ரூபா 6,379,000 ஆகும். இது 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பெற வேண்டிய நானாவித வருவாய் மீதியில் 2014 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே நிலவி வரும் இறைச்சிக் கடை வாடகை நிலுவை மீதி ரூபா 2,356,017 ஆகும். இதனை அறவிடுவதற்கான நடவடிக்கை மீளாய்வாண்டிலும் மேற்கொள்ளப்படவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 138,842,749 ஆகும். இவற்றிற்குரிய சான்றுகள் கிடைக்கப் பெறாமையால் இவற்றைத் திருப்திகரமாக உறுதி செய்ய இயலவில்லை.

### 1.3.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 188(1) ஆம் பிரிவுக்கு முரணாக மாதாந்தப் பொதுக் கூட்டத்தில் பங்குபற்றும் உத்தியோத்தர்களுக்குக் கோல உடைகளை வழங்குவதற்கென 2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 235,000 மீளாய்வாண்டிலும் அறவிடப்படாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை |
|---|---|---|
| (அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) பிரிவு 218 | | |
| 286 (அ) | - | நிதியாண்டு முடிவடைந்ததன் பின்னர், ஒவ்வொரு ஆண்டிலும் மாநகரசபை நிர்வாகம் தொடர்பான அறிக்கையொன்றை மாநகர ஆணையாளர் நிதிக்கூற்றுக்களுடன் கூடிய விரைவில் சபையில் சமர்பிக்க வேண்டுமாயினும், அவ்வாறானதொரு அறிக்கை மீளாய்வாண்டின் பொருட்டுத் தயாரிக்கப்படவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை

| | | | |
|---|---|---|---|
| (i) | xxiv (13.6) | 145,150 | விழா முற்பணமானது 12 மாதங்களுக்கு ஒரு தடவையே வழங்கப்படலாம். இதற்கு முரணாக முன்னர் பெற்ற கடன் அறவிடப்படாதிருக்க, சபையின் 10 ஊழியர்களுக்கு விழா முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) | viii ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் உப பிரிவு | - | செய்த வேலை தொடர்பாக எதுவித அறிக்கையையும் சமர்ப்பிக்காமல் அல்லது மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுக்கான விண்ணப்பப் படிவத்தில் அதனைக் குறிப்பிடாது மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>சில சாரதிகள் தமது கடமைகளை முடித்து வாகனத்தைத் தரிப்பிடத்தில் தரித்து வைத்ததன் பின்னரும் இரவில் ஏறக்குறைய 10 மணி வரை கடமை புரிந்ததாகக் குறிப்பிட்டு மேலதிக நேர வேலைக் கொடுப்பனவைப் பெற்றிருந்தனர். |
| (iii) | viii ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் உப பிரிவு | - | குறித்தவொரு வேலையை நிறைவேற்றுவதற்கு வேறெந்த மார்க்கமும் இல்லாத அதி விசேட சந்தர்ப்பங்களின்போதே மேலதிக நேர வேலைக்காக பணம் செலவழிக்கப்படலாமென்னும், தமக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குச் சபை ஊழியாகளுக்குத் தொடர்ச்சியாக மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் (நி.பி)

| | | | |
|---|---|---|---|
| (i) | 104(2)(3)(4) | - | 2015 ஆம் ஆண்டில் நிகழ்ந்த 05 திடீர் விபத்துக்கள் சம்பந்தமாகக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்படாததுடன் ஆரம்ப மற்றும் பூரண அறிக்கைகளும் தயாரிக்கப்படவில்லை. |
| (ii) | 110 | - | இழப்பு மற்றும் நட்டங்களுக்கான பதிவேடு பேணப்படவில்லை. |
| (iii) | 177 (1) | 26,495 | சேகரிக்கப்படும் வருவாய் நாளாந்தம் அல்லது இயலுமானளவு விரைவில் வங்கியிலிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், நாளாந்தம் சேகரிக்கப்படும் தரிப்பிடக் கட்டணம் தாமதமாகவே வங்கியிலிடப்பட்டிருந்தது. |
| (iv) | 188 (2) | 48,683 | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்பிலிடப்பட்டுத் தேறாதிருக்கும் 05 காசோலைகள் மற்றும் 02 காசுக் கட்டளைகள் என்பன தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (v) | 341 | - | அடியிதழ் சேர் புத்தகங்கள் தொடர்பான விபரம் ஜீ.ஏ.என் 20 படிவத்திலான பதிவேட்டில் பதியப்படவில்லை. |
| (vi) | 342 | - | வழங்கப்பட்ட அடியிதழ் சேர் புத்தகங்களைத் திருப்பிப் பெறாது மீண்டும் அடியிதழ் சேர் புத்தகங்கள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் நிலவின. |
| (vii) | 371(5) | 440,169 | பெற்ற முற்பணத்தை அதனைப் பெற்ற ஆண்டின் டிசெம்பர் 31 அல்லது அத்தினத்திற்கு முன்னர் தீர்த்து வைக்காது 2016 டிசெம்பர் 31 உள்ளவாறு ரூபா 440,169 கூட்டுத் தொகையுடைய முற்பண மீதிகள் இருந்தன. |
| (viii) | 396(ஈ) | 103,810 | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த 6 மாதங்களைக் கடந்த ரூபா 103,810 கூட்டுத் தொகையுடைய 27 காசோலைகள் சம்பந்தமாக 2017 மே 30 ஆந திகதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ix) | 1653 | | வாகனங்களின் தூரமானி செயற்படாவிடத்து அவற்றை விரைந்து பழுதுபார்க்க வேண்டுமாயினும், பல ஆண்டுகளாகச் செயலிழந்திருக்கும் தூரமானிகளை உடைய 31 வாகனங்கள் சபையில் இருந்தன. |

(ஈ) சுற்றறிக்கைகள்

2012 யூலை 11 ஆந் திகதிய WP/LGD/01/2012 இலக்கமுடைய உள்ளூராட்சி ஆணையாளரது (மே.மா) சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| (i) | (xvi) பந்தி | - | திட்டமிடல் கூட்டங்கள் 02 மணித்தியாலங்களுக்கு மேற்பட வேண்டுமாயினும், குறைந்த நேரக் குழுக் கூட்டங்களுக்கும் படி வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) | (xxi) பந்தி | - | அத்துமீறிய நிர்மாண வேலைகள் மற்றும் மண் நிரப்புதல் போன்றவற்றிற்கு மேற்கொள்ளப்படும் தீர்மானம் தொடர்பாக காலாண்டு அறிக்கை உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| | 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2ஆம் பந்தி | - | சபையின் வாகனங்களது எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப்படவில்லை. |

| | |
|---|---|
| 2016 பெப்வரி 29 ஆந் - திகதிய 01/2016 ஆம் இலக்க நிர்வாகச் சுற்றறிக்கையினது 1.2.13 ஆம் பந்தி | உள்ளூராட்சி நிறுவனங்களது நகரசபைத் தலைவர்கள்/தலைவர்கள் உத்தியோகபூர்வ வாகனமாகக் குறிப்பிட்டதொரு வாகனத்தைப் பயன்படுத்துவதாயின் அதற்கான அதி கூடிய எரிபொருள் வரம்பைத் தீமானிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்மொழிதல்கள் இருக்க வேண்டுமாயினும், சபையின் 03 பதவிகள் தொடர்பாக அதி கூடிய வரம்பிற்கு அதிகமாக வரம்பற்ற எரிபொருள் வழங்குவதை சபை ஏற்றுக் கொண்டிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாநகரசபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 349,470,297 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 312,450,626 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 வருவாய்ச் சேகரிப்பிலான செயலாற்றல்

(i) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு என்பவற்றின் பொருட்டுக் கணக்காய்வுக்குச் சமர்பிக்கப்பட உள்ளவாறான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2016 | | | | 2015 | |
|---|---|---|---|---|---|---|
| வருவாய்க்கான விடயம் | உள்ளவாறு அறவிடப்பட வேண்டியது | உள்ளவாறு அறவிடப்பட்டது | ஆண்டின் நிலுவை | டிசெம்பர் 31இல் உள்ளவாறான திரண்ட நிலுவை | உள்ளவாறு அறவிடப்பட வேண்டியது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| தீர்வையும் வரியும் | 363,007 | 202,934 | 160,073 | 3,519 | 364,509 | 344,899 |
| குத்தகை வாடகை | 17,966 | 13,752 | 4,214 | 9,845 | 17,299 | 9,874 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 40,546 | 20,232 | 20,314 | 33,296 | 25,813 | 21,916 |
| ஏனைய வருவாய் | 406,242 | 356,794 | 49,448 | 413,704 | 355,081 | 404,048 |

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய தீர்வை வரியினது திரண்ட நிலுவை ரூபா 3,519,000 ஆகியபோதும், 2016 ஆம் ஆண்டில் மாத்திரமே ரூபா 160,073,000 நிலுவையாக இருந்தமையால் திரண்ட நிலுவையாக ரூபா 3,519,000 காட்டப்பட்டமை பிரச்சினைக்குரியதாகும்.

**2.2.2 தீர்வையும் வரியும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குக் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கெனப் பட்டியலிடப்பட்ட தீர்வை வரியினது வருவாய் ரூபா 342,743,498 ஆகியபோதும், ஆண்டின்போது 67 சதவீதமான ரூபா 230,296,826 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) முன்யை ஆண்டின் இறுதியில் உள்ளவாறான தீர்வை வரிக் கடன்பட்டோர் மீதி நிலுவை ரூபா 341,029,867 ஆகும். இதில் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டது 50 சதவீதமான ரூபா 169,197,413 மாத்திரமே.

(இ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்வை வரி மீதி நிலுவை ரூபா 306,489,840 ஆகும். இதில் ரூபா 50,000க்கு மேற்பட்ட தீர்வை வரியின் 1148 கூறுகள் இருந்தன. அவற்றின் மூலம் அறவிடப்பட வேண்டியிருந்த தீர்வைவரி மீதி ரூபா 149,294,346 ஆகும்.

(ஈ) முன்னைய ஆண்டின் முடிவில் உள்ளவாறான தீர்வை வரி மீதி ரூபா 341,029,867 ஆகும். இதில் ரூபா 8,641,540 அங்கீகாரமின்றிப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(உ) 2016 நவெம்பர் 08 ஆந் திகதிய விசேட முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைப்படி தனி நபர் ஒருவருக்குச் சொந்தமான கட்டிடத்தில் உள்ள 10 நிலையங்களிலிருந்து 2013 முதல் 2016 வரையான காலப்பகுதியின்போது அறவிடப்படவிருந்த தீர்வை வரியில் ரூபா 505,978 அதற்குரிய உறுதிப்படுத்தலின்றி பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 240(3) ஆம் பிரிவின் பிரகாரம், வரிக் குறைப்புக்கு வழங்கப்படும் கால வரம்பானது அக்கட்டிடம் ஆளின்றி நடைபெறுவதாகக் குறிப்பிடும் எழுத்துமூல அறிவித்தல் மாநகரசபையை வந்தடைந்த தினத்திலிருந்து மீண்டும் அதில் குடியேறிய தினத்தில் முடிவடைய வேண்டுமாயினும், சில தீர்வை வரிக் கூறுகளது எழுத்துமூல தீர்வை வரி குறைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவ்வாறு பதிவழிக்கப்பட்டமை சட்டபூர்வமானதே என்பதை உறுதி செய்வதற்குத் தேவையான சான்று பெறப்படவில்லை.

**2.2.3 வியாபார வரி**

(அ) மீளாய்வாண்டில் வியாபார வரி வருவாயாக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 15,000,000 ஆகும். எவ்வாறாயினும் பட்டியலிடப்பட்ட தொகை ரூபா 22,205,859 ஆகும். அதில் மீளாய்வாண்டின்போது அறவிடப்பட்டது 25 சதவீதமான ரூபா 5,573,055 மாத்திரமே.

(ஆ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 21,458,368 வியாபார வரிக் கடன்பட்டோர் மீதியில் மீளாய்வாண்டின்போது 27 சதவீதமான ரூபா 5,695,625 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

**2.2.4 கழிவுப் பொருள் வருவாய்**

கழிவுப் பொருட்களை அகற்றும் வியாபார நிலையங்கள் மற்றும் மாநகரசபை என்பவற்றுக்கிடையே உடன்படிக்கை எதுவுமின்மையால் கழிவுப்பொருள் கட்டண நிலுவையை அறவிடுகையில் சட்டபூர்வமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. 2003 நவெம்பர் 18 ஆந் திகதிய 08 (10) 35 ஆம் இலக்கச் சபைத் தீர்மானம் மற்றும் நிதித் தொழிற்பாட்டு மன்றத்தின் ஆலோசனைப் பிரகாரம் கழிவுப் பொருட்களுக்கான கட்டண நிலுவையை அறவிடாமையால் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கழிவுப் பொருள் மூலமான வருவாய் நிலுவை ரூபா 1,886,150 ஆகவிருந்தது.

**2.2.5 முத்திரைக் கட்டணம்**

(அ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் நிதியாண்டிற்கு முன்னைய ஆண்டில் ஏற்பட்ட காணிப் பரிமாற்றக் கொடுக்கல் வாங்கல்களில் சேர்ந்து நின்ற முத்திரைக் கட்டண வருவாய் நிதியாண்டின் வருவாயாகக் கருதப்படுவதாகக் குறிப்பிடப்பட்டபோதும், 2012,2013,2014,2015 ஆம் ஆண்டுகளின் போதிலான காணிப் பரிமாற்றுக் கொடுக்கல் வாங்கல்கள் மூலம் பெறப்பட்ட ரூபா 267,888,706 ஆண்டிற்கான வருவாயாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டணமாக மதிப்பிடப்பட்ட வருவாய் ரூபா 240,000,000 ஆகியபோதும், ஆண்டின்போது அதில் எதுவுமே பெறப்படவில்லை.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம்**

(அ) 2016 ஆம் ஆண்டிற்கென மதிப்பிடப்பட்ட நீதிமன்றத் தண்டப்பண வருவாய் ரூபா 33,227,000 ஆகியபோதும், உள்ளவாறான வருவாய் ரூபா 210,581 ஆகிவிருந்தது.

(ஆ) 2012,2013,2014,2015 ஆம் ஆண்டிடுகளில் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருவாய் நிலுவையாகிய ரூபா 116,173,231 பெறப்படுவதற்கான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின்போது மேற்கொள்ளப்படவில்லை. 1994 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் தண்டணை வழங்கும் சட்டவாக்கத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தண்டப்பணம் அறவிடப்படும் ஆண்டின் டிசெம்பர் 31 முதல் 5 ஆண்டுகளுக்குள் கோரிக்கைகள் சமர்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், அவை அவ்வாறு சமர்ப்பிக்கப்படவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) அறிவித்தல் பலகை வருவாய்**

2015 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய 1929 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் IV (ஆ) பகுதியில் 2016 ஆம் ஆண்டிற்கான பிரசார அறிவித்தல்களைக் காட்சிக்கு வைப்பதற்கான கட்டணத்தை வசூலிப்பது தொடர்பான அறிவித்தலின் பிரகாரம் சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடத்தில் பிரசார அறிவித்தல் பலகைகள் மற்றும் பதாதைகளை காட்சிக்கு வைக்கும்போது கட்டணம் அறவிடப்பட வேண்டுமாயினும், காலி வீதியின் வில்லியம் சந்தியிலிருந்து ஜயலங்கா ஹாட்வயார் வரையான இரு பக்க எல்லைகளுக்குள் உள்ள 35 நிரந்தர அறிவித்தல் பலகைகளின் 2016 ஆம் ஆண்டிற்கான கட்டணமாக ரூபா 510,700 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

**(ஆ) விற்பனைக் கூட வாடகை**

(i) சபைக்குச் சொந்தமான கடைகளின் எண்ணிக்கை கிட்டதட்ட 371 ஆகும். நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான வருவாய் ரூபா 6,224,259 ஆகும். 371 கடைகளில் ஏறக்குறைய 247 கடைகளின் வாடகை நிலுவையாக இருந்தது. அநேக கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தபோதிலும், குத்தகையாளர்களுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சில உடன்படிக்கைகளது கால வரையறை அதிகரித்திருந்தபோதும் அவற்றைப் புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) கரகம்பிட்டிய பொதுச் சந்தையில் உள்ள கடைகளை வாடகைக்கு வழங்குதல் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- கரகம்பிட்டிய பொதுச் சந்தையின் 19 கடைகள் சம்பந்தமாகக குத்தகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவில்லை.

- மாதாந்த வாடகையை 3 ஆண்டுகளுக்கொரு முறை மதிப்பிட்டு, அவை மீளாய்வு செய்யப்படாதமையால், நெடுங்காலமாக இக்கடைகளிலிருந்து மாதாந்த வாடகையாக ரூபா 50 அறவிடப்பட்டவாறிருந்தது.

- 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 20 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த வாடகை நிலுவை ரூபா 12,273 ஆகும். எவ்வாறாயினும், சபையின் பொது விதிமுறைகளுக்கமைய 03 மாத வாடகை ஒருங்கு சேர்வதற்கு இடமளிக்கப்படலாகாது. அத்துடன், வாடகையைச் செலுத்தாத கடை உரிமையாளர்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளைச் சபை மேற்கொள்ளவுமில்லை. அவ்வாறே, கடை உரிமையாளர், ஊழியர்கள், முகவர்கள் ஆகியோரது பெயர்களைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்காததுடன் 08 கடைகள் உப குத்தகைக்கு வழங்கப்பட்டுமிருந்தன.

- சில கடைகள் வியாபார நடவடிக்கைகளின்றி மூடப்பட்டிருந்தன. 06 ஆம் இலக்க கடையை நபர் ஒருவர் தனது வீடாகப் பயன்படுத்தியிருந்தார். அவ்வாறே, சில கடைகளில் உள்ளோர் மாநகரசபையின் அனுமதியின்றி அவற்றை பழுதுபார்த்திருந்தனர்.

- கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கடைகளது நிரலின் பிரகாரம், 24 ஆம் இலக்கம் ஒரு கடையாகக் காட்டப்பட்டபோதும், அவ்விடத்தில் 3 ஆம் இலக்கத் தீர்வை வரியின் பிரகாரம் 03 கடைகள் இருந்ததுடன், கடை உரிமையாளர்கள் கடைகளைப் பெரிதாக்கி புதிதாக நிர்மாணித்தும் இருந்தனர். சபையின் அனுமதியின்றி இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட அத்துமீறிய செயல் தொடர்பாகச் சபை நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை.

**(இ) வாகனப் பாவணை**

(i) சபையின் 13 வாகனங்கள் பழுதடைந்த நிலையில் இருந்தன. அதில் சில வாகனங்கள் 02 மாதங்கள் தொடக்கம் 05 ஆண்டுகள் வரை பயன்படுத்தப்படாதிருந்தன. அவ்வாறே, வெகு நாட்களாகப் பழுதடைந்த நிலையிலிருந்த 03 வாகனங்களுக்கும் அக்காலத்திற்குரிய அனுமதிப் பத்திரக் கட்டணமும் காப்புறுதிக் கட்டணமும் செலுத்தப்பட்டிருந்தன.

(ii) நகராதிபதியின் பாவனைக்கென 02 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. 2016 சனவரி முதல் யூன் வரையிலான 06 மாதகாலத்திற்கு 2941 லீட்டர் பெற்றோல் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) செயலற்றிருந்த வாகனங்களுக்குப் பதிலாகச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 02 வாகனங்களது ஓட்ட அட்டவணைகளின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்தின் அநேக நாட்களிலும் இவ்விரண்டு வாகனங்களும் இடர்களுக்கான சேவையை வழங்குவதில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் 03 மாதகாலத்தின்போது இவ்வாறாக இடர்களுக்கான

சேவைகளுக்கு இந்த 02 வாகனங்களுக்கும் 750 லீட்டர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், இவ்வாகனம் சென்ற நேரமும் திரும்பி வந்த நேரமும் ஓட்ட அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டிருக்கவுமில்லை.

**(ஈ) உடல் பயிற்சி நிலையங்களை நடாத்துதல்**

சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் இருந்த 20 உடல் பயிற்சி நிலையங்களுக்கு ரூபா 5,043,650 செலவில் 2015 ஆம் ஆண்டின்போது உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தபோதும், நிலையங்களுக்குப் பொறுப்பாக இருப்பவர்கள் அது தொடர்பான நிபுணத்துவத்தைப் பெற்றிராமை, பொருட் பட்டோலைப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிராமை, அவற்றில் குறிப்பிடப்பட்ட பொருட்கள் நேரடியாகப் பரிசீலிப்பதற்கு இல்லாதிருந்தமை, அங்கத்தவர்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை போன்ற குறைபாடுகள் உடல் பயிற்சி நிலையங்களில் காணப்பட்டன.

**(உ) கழிவுப் பொருட்களை அகற்றுதல்**

(i) மீளாய்வாண்டின்போது கழிவுப் பொருட்களை அகற்றுவது தொடர்பாக முறையான திட்டங்கள் சபையால் தயாரிக்கப்படவில்லை.

(ii) கரதியான கழிவுப் பொருள் கூறுக்குக் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தும்போது பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் தொடர்பாக 2016 ஆகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாத அறிக்கைகளின் பிரகாரம் சபையால் பயன்படுத்தப்பட்டிராத 12 வெளிவாரி வாகனங்களின் மூலம் 56.95 தொன் கழிவுப் பொருட்களைக் கொண்டு சென்றதற்காக கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபைக்கு ரூபா 66,064 வழங்கப்பட்டிருந்தது.

(iii) கழிவுப் பொருட்களைச் சேகரிப்பது முறைப்படி முகாமைத்துவமிடப்படாததால் மொத்தக் கழிவுப் பொருட்களிலும் 94 சதவீதம் கலவைக் கழிவுப் பொருட்களாக அகற்றப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின்போது மாநகரசபை ரூபா 21,886,585 கூடுதலாகக் கொடுப்பனவு செய்ய வேண்டியேற்பட்டது.

## 3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2012 யூலை 11 ஆந் திகதிய டபிள்யூ.பீ/எல்.ஜீ.டீ/01/2012 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரது (மே.மா) சுற்றறிக்கையின் (xiii) ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களது திட்டமிடல் குழுவின் அமைப்புக்கிசையாத ஊழியர்களைக் குழுக்களில் சேர்த்து மீளாய்வாண்டின் சனவரி முதல் ஆகஸ்ட் வரை ரூபா 104,000 வழங்கப்பட்டிருந்தது.

## 3.3 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்ட ஊழியர் ஒருவர் 2011 நவெம்பர் 11 முதல் ஏப்ரல் வரை சேவைக்கு வருகை தந்திராத காலத்திற்கு சம்பளமும் படியுமாக ரூபா 1,413,903 வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு முடிவிலேனும் அத்தொகையை மீளப்றெுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடைகளுக்கு வெவ்வேறு நீர் மானிகளைப் பொருத்தாது நீர்க் கட்டணத்தைச் செலுத்துவதற்கு இடமளிக்கப்பட்டமையால் கல்கிஸ்ஸ சுப்பர் விற்பனைக் கூட்டுத்

தொகுதியில் உள்ள கடைகளுக்குத் தாமதக் கட்டணமாக ரூபா100,442 மற்றும் நீருக்கான இணைப்பை மீண்டும் பெறுவதற்கான கட்டணத்தையும் வழங்கவேண்டியேற்பட்டது. அதில் ரூபா 44,344 சபையால் செலவழிக்கப்பட்டிருந்தது.

(இ) நிதிப்பிரமாணம் 210(2)க்கமைய கொடுப்பனவைத் தாமதிப்பதால் கட்டணம் எதுவும் கொடுப்பனவு செய்யவேண்டியேற்படின் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அதனை அறவிடவேண்டுமெனினும், சபையின் மின் கட்டணம் குறித்த தினத்திலல்லாது தாமதமாகிக் கொடுப்பனவு செய்யப்பட்டதால் 2014 முதல் 2016 வரையான காலப்பகுதிக்கு ரூபா 132,343க்கும் அதிகமாக தண்டப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. இத்தொகை பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவில்லை.

(ஈ) 2016 சனவரி 01 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கழிவுப் பொருட்களுக்கான வருவாய் ரூபா 3,302,101 ஆகும். அதில் அறவிடப்பட முடியாதுபோன ரூபா 1,524,026 திரண்ட நிதியத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீட்டில் குடியிருப்பவரால் நீர்க் கட்டணம் செலுத்தப்பட வேண்டுமாயினும் பிரதி மாநகர ஆணையாளரது உத்தியோகபூர்வ மனையின் 2016 யூலை வரையிலான நீர்க் கட்டணமான ரூபா 87,845 குடியிருப்பாளரால் செலுத்தப்படாமையால் சபை அதனைச் செலுத்தியிருந்தது. அதனைக் குறிப்பிட்டவர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) கல்கிஸ்ஸ மவுன்ட் பார்க்கில் பல் சிகிச்சை நிலையத்தை நிர்மாணிக்கும்போது பயன்படுத்திய நீருக்கும் மின்சாரத்துக்கும் முறையே ரூபா 29,785 மற்றும் ரூபா 8,275 எனச் சபையால் வழங்கப்பட்டு அத்தொகை ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்படாதிருந்தது.

(இ) அரசாங்க வங்கிக் கணக்குகளில் மேலதிகப்பற்று பெறப்படலாகாது. எவ்வாறாயினும், சபை மக்கள் வங்கியிலுள்ள நடைமுறைக் கணக்கின் மூலம் மேலதிகப் பற்று வசதிகளைப் பெற்று ரூபா 131,839 செலுத்தப்பட்டிருந்தது

(ஈ) அனகாரிக தர்மபால மாவத்தை ஆயுர்வேத கட்டிடத்தின் நீர் வழங்ல் நடவடிக்கைகளும் அதற்குரிய பழுதுபார்த்தல்களும் நிறைவேற்றப்படுவதற்காக 2015 செப்டெம்பர் 01 முதல் 10 மாத காலத்தின்போது தனியார் நிறுவனம் ஒன்றுடன் இரு முறை உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டு முறையே ரூபா 530,875 மற்றும் ரூபா 579,325 என மொத்தமாக ரூபா 1,110,200க்கான 02 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தபோதும், குறித்த பழுதுபார்த்தல் வேலை முறைப்படி அமையவில்லை.

### 3.5 பயன்படுத்தப்படாத/குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 11 வாகனங்கள் 10 முதல் 21 மாதங்களாகச் செயலற்றிருந்ததுடன், 2017 மே 30 ஆந் திகதியளவிலும் அவற்றைப் பழுதுபார்த்துப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான 13 வாகனங்கள் நெடுங்காலமாகப் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் இருந்தபோதும், அவற்றைப் பழுதுபார்ப்பதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) சபையால் சுவீகரிக்கப்பட்ட 03 கடைகளும் முத்திரையிடப்பட்ட 27 கடைகளும் வேறு குத்தகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருவாயைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) சபையினது வாகனமொன்று 2015 சனவரி 17 ஆந் திகதி விபத்துக்குள்ளாகி 2016 யூன் 23 ஆந் திகதியளவிலும் பழுதுபார்க்கப்பட்டவாறிருந்தது. இதனால் 1½ ஆண்டுகளுக்கு மேலாக அதனைப் பயன்படுத்த முடியாதிருந்தது.

(உ) நெடுங்காலமாக வழங்கப்படாதும் காலங்கடந்தும் விட்டதுமான ரூபா 589,154 பெறுமதியான கையிருப்பு மாநகர சபைக் களஞ்சியத்தில் இருந்தது.

**3.6 ஒப்பந்த நிர்வாகம்**

(i) அநேக செயற்திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படுகையில் மேலதிக வேலைகளுக்கு ஒப்பந்தப் பெறுமதியில் 10 சதவீதத்துக்கும் அதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) அநேக செயற்திட்டங்களுக்குரிய வேலை முடிவுறும் அறிக்கை தயாரிக்கப்படாதிருந்தன.

**3.7 பதவியணி நிர்வாகம்**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மாநகர சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் வருமாறு.

| **பதவி வகை** | **2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | |
|---|---|---|---|
| | **அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை** | **உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை** | **வெற்றிட எண்ணிக்கை** |
| நிறைவேற்று தரம் | 35 | 26 | 09 |
| மூன்றாம் நிலை | 343 | 270 | 73 |
| ஆரம்ப நிலை | 1402 | 1378 | 24 |
| ஏனையவை | - | - | - |
| ஒப்பந்தம் | 23 | 23 | - |
| பட்டப்படிப்புப் பயிற்சி | - | 01 | - |
| | 1803 | 1697 | 106 |

சபையின் பாதுகாப்புக் காவலர் மற்றும் காவலாளிகள் பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்ட 20 உத்தியோகத்தர்களில் 11 உத்தி யோகத்தர்கள் வேறு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். சபையின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு தனியார் பாதுகாப்புத் துறையினரது சேவை பெறப்பட்டு 2016 ஆம் ஆண்டின்போது அதன் பொருட்டு அத்தனியார் பாதுகாப்புக் கம்பனிக்கு ரூபா 15,103,521 வழங்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) ஆண்டின்போது வருவாய் மற்றும் செலவின விடயங்களுக்கிடையே மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததையடுத்து பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாயிலும் செலவிலும் 11 முதல் 98 சதவீதம் வித்தியாசம் நிலவிய 17 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இதனால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது

(ஆ) மக்களின் நலனோம்பலுக்காக பாதீடு செய்யப்பட்ட 51 செலவின விடயங்களது மொத்தத் தொகை ரூபா 209,098,000 ஆகும். மீளாய்வாண்டின்போது இதன் மூலம் செலவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) ஏழு வருவாய்த் தலைப்புகளின் கீழ் 07 வருவாய்க்கான விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட ரூபா 545,000 வருவாயில் மீளாய்வாண்டின்போது வருவாய் எதுவுமே பெறப்படவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அமசங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) நிலையான சொத்து நிர்வாகம்
(உ) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஊ) ஊழியர் கடன் முகாமைத்துவம்